ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி
# 2.10 – மஞ்சாடு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.10 – மஞ்சாடு

‡ மஞ்சாடு வரை ஏழும் கடல்கள் ஏழும் ⋆
வானகமும் மண்ணகமும் மற்றும் எல்லாம் ⋆
எஞ்சாமல் வயிற்றடக்கி ஆலின் மேல் ஓர் ⋆
இளந் தளிரில் கண்வளர்ந்த ஈசன் தன்னை ⋆
துஞ்சா நீர் வளம் சுரக்கும் பெண்ணைத் தென் பால் ⋆
தூய நான்மறையாளர் சோமுச் செய்ய ⋆
செஞ்சாலி விளை வயலுள் திகழ்ந்து தோன்றும் ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ‖ **2.10.1** ‖

கொந்தலர்ந்த நறுந் துழாய் சாந்தம் தூபம் ⋆
தீபம் கொண்டமரர் தொழப் பணம் கொள் பாம்பில் ⋆
சந்தணி மென் முலை மலராள் தரணி மங்கை ⋆
தாம் இருவர் அடி வருடும் தன்மையானை ⋆
வந்தனை செய்திசை ஏழ் ஆறங்கம் ⋆
ஐந்து வளர் வேள்வி நான்மறைகள் மூன்று தீயும் ⋆
சிந்தனை செய்திரு பொழுதும் ஒன்றும் ⋆
செல்வத் திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ‖ **2.10.2** ‖

கொழுந்தலரும் மலர்ச் சோலைக் குழாங்கொள் பொய்கைக் ⋆
கோள் முதலை வாள் எயிற்றுக் கொண்டற்கெள்கி ⋆
அழுந்திய மா களிற்றினுக்கன்றாழி ஏந்தி ⋆
அந்தரமே வரத் தோன்றி அருள் செய்தானை ⋆
எழுந்த மலர்க் கரு நீலம் இருந்தில் காட்ட ⋆

இரும் புன்னை முத்தரும்பிச் செம் பொன் காட்ட ⋆
செழுந்தட நீர்க் கமலம் தீவிகை போல் காட்டும் ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ॥ **2.10.3** ॥

தாங்கரும் போர் மாலி படப் பறவை ஊர்ந்து ⋆
தராதலத்தோர் குறை முடித்த தன்மையானை ⋆
ஆங்கரும்பிக் கண் நீர் சோர்ந்தன்பு கூரும் ⋆
அடியவர்கட்கார் அமுதம் ஆனான் தன்னை ⋆
கோங்கரும்பு சுர புன்னை குரவார் சோலைக் ⋆
குழா வரி வண்டிசை பாடும் பாடல் கேட்டு ⋆
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ॥ **2.10.4** ॥

கறை வளர் வேல் கரன் முதலாக் கவந்தன் வாலி ⋆
கணை ஒன்றினால் மடிய இலங்கை தன்னுள் ⋆
பிறை எயிற்று வாள் அரக்கர் சேனை எல்லாம் ⋆
பெருந் தகையோடுடன் துணித்த பெம்மான் தன்னை ⋆
மறை வளரப் புகழ் வளர மாடம் தோறும் ⋆
மண்டபம் ஒண் தொளி அனைத்தும் வாரம் ஓத ⋆
சிறை அணைந்த பொழில் அணைந்த தென்றல் வீசும் ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ॥ **2.10.5** ॥

உறி ஆர்ந்த நறு வெண்ணெய் ஒளியால் சென்று ⋆
அங்குண்டானைக் கண்டாய்ச்சி உரலோடார்க்க ⋆
தறி ஆர்ந்த கருங்களிறே போல நின்று ⋆
தடங்கண்கள் பனி மல்கும் தன்மையானை ⋆
வெறி ஆர்ந்த மலர் மகள் நா மங்கையோடு ⋆
வியன் கலை எண் தோளினாள் விளங்கு ⋆

செல்வச் செறியார்ந்த மணி மாடம் திகழ்ந்து தோன்றும் ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ‖ **2.10.6** ‖

இருங்கைம் மா கரி முனிந்து பரியைக் கீறி ⋆
இன விடைகள் ஏழ் அடர்த்து மருதம் சாய்த்து ⋆
வரும் சகடம் இற உதைத்து மல்லை அட்டு ⋆
வஞ்சம் செய் கஞ்சனுக்கு நஞ்சானானை ⋆
கரும் கமுகு பசும் பாளை வெண் முத்தீன்று ⋆
காய் எல்லாம் மரகதமாய்ப் பவளம் காட்ட ⋆
செருந்தி மிக மொட்டலர்த்தும் தேன் கொள் சோலைத் ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ‖ **2.10.7** ‖

பாரேறு பெரும் பாரம் தீரப் ⋆
பண்டு பாரதத்துத் தூதியங்கி ⋆
பார்த்தன் செல்வத் தேர் ஏறு சாரதி ஆய் எதிர்ந்தார் சேனை ⋆
செருக்களத்துத் திறல் அழியச் செற்றான் தன்னை ⋆
போர் ஏறொன்றுடையானும் அளகைக் கோனும் ⋆
புரந்தரனும் நான்முகனும் பொருந்தும் ஊர் போல் ⋆
சீர் ஏறு மறையாளர் நிறைந்த ⋆
செல்வத் திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ‖ **2.10.8** ‖

தூ வடிவின் பார் மகள் பூ மங்கையோடு ⋆
சுடர் ஆழி சங்கிரு பால் பொலிந்து தோன்ற ⋆
காவடிவின் கற்பகமே போல நின்று ⋆
கலந்தவர்கட்கருள் புரியும் கருத்தினானை ⋆
சேவடி கை திருவாய் கண் சிவந்த ஆடை ⋆
செம் பொன் செய் திரு உருவம் ஆனான் தன்னை ⋆

தீ வடிவின் சிவன் அயனே போல்வார் மன்னு ⋆
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே ‖ **2.10.9** ‖

‡ வாரணம் கொள் இடர் கடிந்த மாலை ⋆
நீல மரதகத்தை மழை முகிலே போல்வான் தன்னை ⋆
சீர் அணங்கு மறையாளர் நிறைந்த ⋆
செல்வத் திருக்கோவலூர் அதனுள் கண்டேன் என்று ⋆
வார் அணங்கு முலை மடவார் மங்கை வேந்தன் ⋆
வாள் கலியன் ஒலி ஐந்தும் ஐந்தும் வல்லார் ⋆
காரணங்களால் உலகம் கலந்தங்கேத்தக் ⋆
கரந்தெங்கும் பரந்தானைக் காண்பர் தாமே ‖ **2.10.10** ‖

அடிவரவு — மஞ்சாடு கொந்து கொழுந்து தாங்கு கறை உறி இருங்கை பார் தூவடிவின் வாரணம் இருந்தண்

மஞ்சாடு முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்